# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 26.07.2018

## தமிழக நிகழ்வுகள்

- எழும்பூர் அரசு மகப்பேறு மற்றும் நோயியல் மருத்துவமனை மற்றும் அரசினர் தாய்சேய் நல மருத்துவமனையின் 175 **ஆவது ஆண்டுகள்** நிறைவடைந்தன.
  - இந்த மருத்துவமனை **1844 ஆம் ஆண்டு ஜூலை 25** ஆம் தேதி இந்த மருத்துவமனை தொடங்கப்பட்டது.
  - மெட்ராஸ் **லையிங் இன் ஹாஸ்பிட்டல்** என்ற பெயரில் பிரிட்டிஷ் பெண்களுக்கு மட்டுமே இந்த மருத்துவமனையில் முதலில் பிரசவம் பார்க்கப்பட்டது.
  - **1882 ஆம்** ஆண்டிலிருந்து தான் இந்தியர்களுக்கும் இந்த மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.



- தமிழ்நாட்டில் உள்ள நினைவுச் சின்னங்களை பாதுகாப்பதற்காக **ஆதர்ஷ்** திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட 7 இடங்களின் உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு ஏதுவான

வசதிகளை தரம் உயர்த்துதலுக்கு இந்திய தொல்லியல் கணக்கெடுப்புத் துறை **(Archaeological Survey of India)** திட்டமிட்டுள்ளது.

- கடற்கரை ஆலயம், மாமல்லபுரம்
- செஞ்சி கோட்டை
- கைலாசநாதர் ஆலயம், காஞ்சிபுரம்
- பிரகதீஸ்வரர் ஆலயம், தஞ்சாவூர்
- சித்தன்னவாசல் குகைகள்
- வேலூர் கோட்டை
- மூவர் ஆலயம் கொடும்பலூர்.



- நாட்டின் மின் உற்பத்தித் துறையில் சிறப்பான வளர்ச்சி பெற்று வரும் பொதுத் துறை நிறுவனத்துக்கான விருதை என்.எல்.சி. இந்தியா நிறுவனம் பெற்றுள்ளது.



- **ஒடிசா அரசு Green Mahanadi Mission** என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது
  - ➢ இந்த திட்டத்தின் மூலம் மாகநதி ஆறு மற்றும் அதன் கிளை ஆறுகளில் 2 கோடி மரக்கன்றுகள் நடும் திட்டத்தை உருவாக்கியுள்ளது.
- **நோக்கம்**
  - ○ ஆற்றுப் படுகையில் ஏற்படும் மண் அரிப்பை தடுப்பதற்காகவும் நிலத்தடி நீரை சுத்திகரிப்பு செய்யவும் உதவும்.
  - ○ மாகநதி ஆறு சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா மாநிலங்களில் பாய்கிறது.




- தேசியக் குழுவினால் நடத்தப்படும் **போஷான் அபியான் (POSHAN ABIYAAN)** திட்டத்திற்கான 2 வது கூட்டம் புதுடில்லியில் நடைபெற்றது.
  - ➢ இந்தக் கூட்டத்திற்கு நிதி ஆயோக் அமைப்பின் துணைத் தலைவர் தலைமை விகித்தார்.
  - ➢ ஊட்டச் சத்துக் குறைபாட்டை போக்குவதற்காக துவங்கப்பட்ட இத்திட்டம் மார்ச் 8-ம் நாள் தோற்றுவிக்கப்பட்டது.
  - ➢ ஒவ்வொரு வருடமும் **செப்டம்பர்** மாதம் **தேசிய ஊட்டச்சத்து மாதமாக** அனுசரிக்கப்படுகிறது.
  - ➢ இந்த கூட்டத்தை இந்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தை நல

மேம்பாட்டு அமைச்சகம் நடத்தியது.




- **உத்திரப் பிரதேசத்தின் லக்னோவில்** விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய வங்கியானது (NABARD NATIONAL BANK OF AGRICULTURE AND DEVELOPMENT) **பருவ நிலை மாற்றத்திற்கான மையத்தைத் தொடங்கியுள்ளது**.
  - இந்த மையம் தென் கிழக்கு ஆசியாவில் பருவநிலை மாற்றத்திற்காக தொடங்கப்பட்ட முதல் மையம் ஆகும்.

- GST சபையின் 28 வது இடைக்கால நிதி அமைச்சர் **பியூஸ் கோயல்** தலைமையில் புதுதில்லியில் நடைபெற்றது.
  - இந்த சபையில் **Sanitary Napkin** க்கு **சரக்கு மற்றும் சேவை** வரியிலிருந்து விலக்கு அளித்துள்ளது.




- ஜுலை 30 ஆம் நாள், **உலக அளவில் குழந்தைகள் கடத்தப்படுவதற்கு World Day against Trafficking** எதிரான நாளாக பின்பற்றப்பட்டு வருகிறது.
  - மகளிர் மற்றும் குழந்தை நல மேம்பாட்டு அமைச்சகம் குழந்தைகளுக்கான அவரச அழைப்பு எண் 1098 (Child Line Number -1098) வெளியிட்டுள்ளது.
  - இந்த அவரச அழைப்பு என் ஆனது குழந்தைகளுக்கான 24 மணி நேர இலவச அவசர சேவையாகும்.
  - குழந்தைகளுக்கு ஆபத்து நேரும் போது முதலுதவி வழங்கவும் ஆபத்திலிருந்து பாதுகாக்கவும் இந்த எண் பயன்படும்.
  - தற்போது இந்த எண் இந்தியாவில் மொத்தம் 450 இடங்களில் பயன்பாட்டில் உள்ளது.




We Shine Academy ™